ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ மெச்சூது ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ மெச்சூது ॥

## அப்பூச்சி காட்டுதல்

‡மெச்சூது சங்கம் இடத்தான்⋆ நல் வேய் ஊதி⋆
    பொய்ச் சூதில் தோற்ற⋆ பொறை உடை மன்னர்க்காய்⋆
பத்தூர் பெறாதன்று⋆ பாரதம் கைசெய்த⋆
    அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான்⋆
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான் (1)

மலை புரை தோள் மன்னவரும்⋆ மாரதரும் மற்றும்⋆
    பலர் குலைய⋆ நூற்றுவரும் பட்டழிய⋆ பார்த்தன்
சிலை வளையத்⋆ திண்தேர்மேல் முன்னின்ற⋆ செங்கண்
    அலவலை வந்தப்பூச்சி காட்டுகின்றான்⋆
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான் (2)

காயும் நீர் புக்குக்⋆ கடம்பேறி⋆ காளியன்
    தீய பணத்தில்⋆ சிலம்பார்க்கப் பாய்ந்தாடி⋆
வேயின் குழல் ஊதி⋆ வித்தகனாய் நின்ற⋆
    ஆயன் வந்தப்பூச்சி காட்டுகின்றான்⋆
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான் (3)

இருட்டில் பிறந்து போய்⋆ ஏழை வல் ஆயர்⋆
    மருட்டைத் தவிர்ப்பித்து⋆ வன் கஞ்சன் மாளப்
புரட்டி⋆ அந்நாள் எங்கள்⋆ பூம்பட்டுக் கொண்ட⋆
    அரட்டன் வந்தப்பூச்சி காட்டுகின்றான்⋆
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான் (4)

சேப்பூண்ட⋆ சாடு சிதறித்⋆ திருடி நெய்க்-
    காப்பூண்டு⋆ நந்தன் மனைவி கடை தாம்பால்⋆
சோப்பூண்டு துள்ளி⋆ துடிக்கத் துடிக்க⋆ அன்று
    ஆப்பூண்டான் அப்பூச்சி காட்டுகின்றான்⋆
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான் (5)

செப்பிள மென்முலைத்⋆ தேவகி நங்கைக்கு⋆
சொப்படத் தோன்றித்⋆ தொறுப்பாடியோம் வைத்த⋆
துப்பமும் பாலும்⋆ தயிரும் விழுங்கிய⋆
அப்பன் வந்தப்பூச்சி காட்டுகின்றான்⋆
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான் (6)

தத்துக் கொண்டாள் கொலோ⋆ தானே பெற்றாள் கொலோ⋆
சித்தம் அனையாள்⋆ அசோதை இளஞ்சிங்கம்⋆
கொத்தார் கருங்குழல்⋆ கோபால கோளரி⋆
அத்தன் வந்தப்பூச்சி காட்டுகின்றான்⋆
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான் (7)

கொங்கை வன்⋆ கூனிசொற் கொண்டு⋆ குவலயத்
துங்கக் கரியும்⋆ பரியும் இராச்சியமும்⋆
எங்கும் பரதற்கருளி⋆ வன்கான் அடை⋆
அங்கண்ணன் அப்பூச்சி காட்டுகின்றான்⋆
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான் (8)

பதக முதலை⋆ வாய்ப் பட்ட களிறு⋆
கதறிக் கைகூப்பி⋆ என் கண்ணா! கண்ணா! என்ன⋆
உதவப் புள் ஊர்ந்து⋆ அங்குறுதுயர் தீர்த்த⋆
அதகன் வந்தப்பூச்சி காட்டுகின்றான்⋆
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான் (9)

‡வல்லாளி இலங்கை மலங்கச்⋆ சரந் துரந்த⋆
வில்லாளனை⋆ விட்டுசித்தன் விரித்த⋆
சொல் ஆர்ந்த அப்பூச்சி⋆ பாடல் இவை பத்தும்
வல்லார் போய்⋆ வைகுந்தம் மன்னி இருப்பரே (10)

‖ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ‖